# பத்திரிகைச் செய்தி

## அனுமதி கடிதம் கொடுப்பதற்கு லஞ்சம் கேட்டு பெற்ற வனச்சரக அலுவலர் மற்றும் தற்காலிக ஊழியர் கைது

ஆந்திர மாநிலம், திருப்பதி மாவட்டம், வரதய்யபாளையம் மண்டலம், சாட்டிலைட் காலனியை சேர்ந்த திரு.P.முனிபாபு,ஆ/வ-40, த/பெ.முனுசாமி நாயுடு, என்பவர் மேற்கண்ட முகவரியில் தனது குடும்பத்துடன் வசித்து வருவதாகவும், கர்நாடக மாநிலம், பெங்களூரில் இயங்கிவரும் JSSN Exim Private Limited என்ற நிறுவனத்தில் Field Manager-ஆக கடந்த 2022 முதல் பணிபுரிந்து வருவதாகவும், அந்நிறுவனத்தில் சட்டப்படி செம்மரங்களை வாங்கி பாதுகாப்பாக வைத்து புகார்தாரரின் ஓனர் மூலம் சீனா போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் நிறுவனமாகும். புகார்தாரர் ஆந்திரா மற்றும் தமிழ்நாட்டில் செம்மரம் வளர்த்து விற்க்கும் விவசாயிகளிடம் அனுகி வியாபாரம் பேசி முறைப்படி கிடங்கிற்க்கு கொண்டு போகும் வரை எந்த பிரச்சனை வந்தாலும் Field Manager-கள் தான் பார்த்து கொள்ளவேண்டும் என்று ஓனர் அதிகாரம் கொடுத்துள்ளார். எனவே கடந்த ஜனவரி மாதம் மாதர்பாக்கம், பல்லவாடா மற்றும் தோக்கமூர் கிராமங்களில் செம்மரம் வாங்கி அறுவடை செய்து அப்புறப்படுத்திக்கொள்ள முறையாக அனுமதியை திருவள்ளூர் மாவட்ட வன அலுவலர் அவர்களின் மூலம் ஆணை வழங்கப்பட்டது. அதன்பின் அறுவடை செய்யப்பட்ட மரங்களை எடுத்து செல்ல அனுமதி கேட்டு திருவள்ளூர் வனக்கோட்டம் அலுவலகம் சென்று மாவட்ட வன அலுவலர் அவர்களிடம் படிவம் VI உடன் அனுமதி சீட்டு 4 எண்ணிக்கையில் கேட்டதற்க்கு கும்மிடிப்பூண்டி (இருப்பு) மாதர்பாக்கத்திலுள்ள வனச்சரக அலுவலர் திரு.V.ஞானப்பன், அவர்களை சென்று பார்க்கும்மாறு கூறியதின் பெயரில் புகார்தாரர் கடந்த 06.07.2023ம் தேதி அவரை சென்று பார்த்து அனுமதி ஆர்டர் குறித்து கேட்ட போது லஞ்சமாக ரூ.10,000/- கொடுத்தால் தான் என் அலுவலக முத்தரையை வைப்பனே் என்று கூறி அனுப்பியுள்ளார். மீண்டும் புகார்தாரர் கடந்த 11.07.2023ம் தேதி மதியம் வனச்சரக அலுவலர் திரு. V.ஞானப்பன், அவர்களை மனுதாரர் சென்று பார்த்து நான் எங்கள் நிறுவனத்தில் சாதாரண ஒரு தொழிலாளி என்றும் மற்றும் என்னுடைய ஓனர் அவ்வளவு பணம் தர மாட்டார் என்று கூறியதற்க்கு, திரு.ஞானப்பன் அவர்கள் இப்போது லஞ்சமாக ரூ.5,000/- கொடு என்றும் அடுத்த முறை இதே பணத்திற்க்கு அனுமதி கிடைக்காது என்று கூறி பணத்தை கொடுத்துவிட்டு வேலையை முடித்துகொள் என்று கறாராக கூறி அனுப்பியுள்ளார். எனவே புகார்தாரர் திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தை அணுகி புகார் அளித்ததின் பேரில் வழக்கு பதிவு செய்து இன்று 13.07.2023-ஆம் தேதி மேற்படி லஞ்சபணம் ரூ.5,000/-த்தை புகார்தார் திரு.ஞானப்பன் அவர்களிடம் கொடுக்க சென்ற போது திரு.ஞானப்பன் அவர்கள் அங்கு பணியில் இருந்த திரு.ஞானப்பன் டிரைவர் திரு.யுவராஜ், (தற்காலிக ஊழியர்) அவர்களை அழைத்து வந்து அவரிடம் கொடுக்குமாறு கூறியதின் பெயரில் புகார்தாரர் அப்பணத்தை டிரைவரிடம் கொடுத்த போது திருவள்ளூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட பொறி வைப்பு நடவடிக்கையில் கைது செய்யப்பட்டனர்.